**பொல்பிதிகம பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொல்பிதிகம பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கை தகவல்கள் உள்ளடங்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொல்பிதிகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா என்பதும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான சொத்து அல்லாத உத்துருவெல்ல நீர் செயற்திட்டத்தில் நீர் குழாய்களை அமைப்பதற்காக மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 159,947 செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 896,012 செலவினம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டில் ரூபா 120,547 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் மற்றும் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 137,762 தொகையான வட்டி என்பன குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையிடம் ஒப்படைக்கப்பட்ட ரூபா 403,000 தொகையான 46 பொதுக்கிணறுகளின் | எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் ரூபா 156,096 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | -மேற்படி- | -மேற்படி- |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் உள்ள ரூபா 89,044 பெறுமதியில் பெறுமதியிடப்பட்ட மூகலன அந்தரஹேன அல்லது அம்பகஹமுல கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானம் அமைந்துள்ள காணியின் பெறுமதிக்கும் நிலையான சொத்து பதிவேட்டில் காட்டப்பட்ட பெறுமதிக்கும் இடையில் ரூபா 50,044 வேறுபாடு காணப்பட்டது. | தவறுதலாக பதிவு செய்யப்பட்டிருப்பதால், எதிர்காலத்தில் திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 6,818,990 கூட்டுமொத்தமான 06 நூலகங்கள் தொடர்பான புத்தக மீதிகளுக்கும் பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் காட்டப்பட்டுள்ள மீதிகளுக்கும் இடையே ரூபா 470,827 வேறுபாடு இருந்தது. | நூலகர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி சரியான தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| | நி.பி. 770(4) | ஓட்டத்தில் இருந்து நீக்கப்பட்ட 04 | இந்த வாகனங்கள் கொள்வனவு | காலதாமதமின்றி கைதவிர்ப்பு |

| | | |
|---|---|---|
| வாகனங்கள் தொடர்பில் கைதவிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | செய்யும் நோக்கத்திற்காக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுட ன், கையகப்படுத்திய பின்னர் கைதவிர்ப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 13,317,548 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களை மிகைத்த வருமானம் ரூபா 11,143,743 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | **2023** | | | | **2022** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா. 000** | **பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 000** | **சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா. 000** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா. 000** | **மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா. 000** | **பட்டியலிடப்பட்ட வருமானம் ரூபா. 000** | **சேகரிக்கப் பட்ட வருமானம் ரூபா. 000** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை ரூபா. 000** |
| வீதவரிகள் | 3,574 | 4,210 | 4,214 | 7 | 2,983 | 3,428 | 3,741 | 11 |
| வாடகைகள் | 9,913 | 7,653 | 7,737 | 25 | 12,508 | 6,291 | 6,183 | 109 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,049 | 1,070 | 1,070 | - | 1,258 | 1,007 | 1,007 | - |
| ஏனைய வருமானம் | 25,273 | 33,491 | 11,621 | 21,870 | 37,088 | 37,088 | 19,282 | 27,865 |
| **மொத்தம்** | 39,809 | 46,424 | 24,642 | 21,902 | 53,837 | 47,814 | 30,213 | 27,985 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மதிப்பிடப்பட்ட வாடகையின் கீழ் பல்நோக்கு கட்டிடத்தின் மேல் தளங்களை குத்தகைக்கு விடுவதன் விளைவாக சபைக்கு 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு ரூபா 123,600 நட்டம் ஏற்பட்டிருந்தது. | சபைக் கூட்டத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் சொத்து குத்தகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் இந்த மதிப்பீட்டு பெறுமதி 2024 ஆம் ஆண்டிற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நீண்ட கால குத்தகைக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா 1,000 படி குத்தகைக்கு விடப்பட்ட சபைக்கு சொந்தமான பதினேழு வியாபார கடைகள் 2023 ஆம் ஆண்டில் உள்ளவாறு ரூபா 204,000 பெறுமதிக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் மேற்படி 17 வியாபார கடைகளுக்காக ரூபா 525,000 வருடாந்த குத்தகை வாடகை பெறப்பட வேண்டிய போதிலும் மதிப்பீட்டு அறிக்கைகளின் பிரகாரம் அமுல்ப்படுத்தப்படாததால், சபை ரூபா 321,000 பெறுமதியை இழந்திருந்தது. | சபைக் கூட்டத்தின் தீர்மானத்தின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் புதிய மதிப்பிடப்பட்ட பெறுமதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வருடாந்த மெய்மையாய்வை நடாத்தி பெறப்பட்ட பட்டியலில் உள்ளடக்கப்பட்ட அனைத்து செயற்திட்டங்களும் செயற்திட்டங்களின் வரி பதிவேடு, வியாபார வரி பதிவேடு மற்றும் வர்த்தக உரிமக் கட்டணப் பதிவேட்டில் பிரதேச சபை ஒழுங்குவிதி 61 இன் பிரகாரம் மெய்மையாய்வை நடாத்தாமல் உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும் அத்தகைய மெய்மையாய்வை நடாத்தாமல் கட்டணம் செலுத்தும் வணிகங்களை மாத்திரமே பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | 2023 ஆம் ஆண்டில் வருடாந்த மெய்மையாய்வை நடாத்தி, அந்த அனைத்து வணிகங்களிடமிருந்தும் வரிகள் மற்றும் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மெய்மையாய்வில் கண்டறியப்பட்ட அனைத்து செயற்திட்டங்களும் பதிவேட்டில் சேர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஆம் ஆண்டில் புதுப்பிக்கப்பட வேண்டிய 50 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களைப் புதுப்பித்து அந்தக் கட்டணங்களை அறவிடுவதற்கு சபை தவறியதால், சபைக்கு ஒதுக்கப்பட்ட | சுற்றாடல் உரிமத்தை புதுப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து உரிமதாரர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | உரிய காலத்தில் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| சுற்றாடல் ஒழுங்குமுறைப் பொறுப்பு புறக்கணிக்கப்பட்டது. | | எடுக்கப்பட வேண்டும். |
| (உ) சபை பிரதேசத்தில் 06 தொடர்பாடல் முகவர்களால் இருபத்தி இரண்டு ஒலிபரப்பு கோபுரங்கள் நிறுவப்பட்டிருந்த போதிலும் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் 08 கோபுரங்களுக்காக பெறப்பட வேண்டிய ரூபா 72,000 தொகையான குத்தகை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வருடத்தில் தொலைபேசி ஒலிபரப்பு கோபுர உரிமையாளர்களிடம் இருந்து குத்தகை வாடகையை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | வருமான நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 622,900 பெறுமதியான 04 வாகனங்கள் மற்றும் 02 கொங்கிறீட் கலவை இயந்திரங்கள் சபை வளாகத்தில் பயன்பாடின்றி விளைவற்றிருந்தன. | 2022 ஆம் ஆண்டுக்கான பொருள் மெய்மையாய்வு பரிந்துரைகளின் பிரகாரம் இயங்கும் நிலையில் இல்லாத இந்த வாகனங்களை கைதவிர்ப்பு செய்வதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பயன்படுத்தக்கூடிய சொத்துக்களை திருத்தம் செய்வதற்கும், விளைவற்ற சொத்துக்களை கைதவிர்ப்பு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முச்சக்கர வண்டியொன்று 2019 ஆம் ஆண்டில் ஓட்டத்தில் இருந்து நீக்கப்பட்டு கைதவிர்ப்பு செய்யப்பட்ட போதிலும் அதன் பதிவை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் HD – 8236 ஆம் இலக்க முச்சக்கர வண்டி 2019 செப்தெம்பர் 12 இல் பொது ஏலத்தின் மூலம் ஏலம் விடப்பட்டு நிலையான சொத்துக்களில் இருந்து நீக்கப்பட்டது. | சபையின் பெயரில் உள்ள பதிவை இரத்து செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கணனிகளை கொள்வனவு செய்வதற்காக 03 நிறுவனங்களிடம் இருந்து கூறுவிலைகள் பெறப்பட்டதுடன், குறைந்த கேள்விதாரரை தெரிவு செய்வதற்கு பதிலாக இரண்டாவது குறைந்த கேள்விதாரரை தெரிவு செய்து | கணக்காய்வு மூலம் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து பெறுகை செயன்முறையை | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளைப் பெற்ற பின்னர், அதன் பிரகாரம் பெறுகை |

| | | |
|---|---|---|
| ரூபா 555,750 ஐ செலுத்தி 02 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. ஆதன் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின்றி கணனிகளைத் தெரிவு செய்தமை தொடர்பில் குறைந்த விலையை சமர்ப்பித்த விநியோகஸ்தரை நிராகரிப்பதற்கான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | செயலாளரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் சபை 40 செயற்திட்டங்களை பூர்த்தி செய்திருக்க வேண்டிய போதிலும் அதில் 17 செயற்திட்டங்களே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதற்காகவும் பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களுக்காகவும் ரூபா 37,092,800 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிறைவேற்றப்படாத செயற்திட்டங்களுக்காக பாதீட்டின் மூலம் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதியேற்பாடுகள் கிடைக்காததாலும், எதிர்பார்த்த வருமானம் கிடைக்காததாலும் ஏனைய செயற்திட்டங்களை மேற்கொள்ள முடியவில்லை. | சபையின் அலுவல்களை செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்படாத மற்றும் பாதீட்டு ஒதுக்கீடுகள் இல்லாத ஒன்பது செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் சேர்க்கப்படாத போதிலும் சபைக் கூட்டத்தின் தீர்மானங்களின் பிரகாரம் இச் செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செயல்நடவடிக்கை திட்டம் ஒரு பயனுள்ள முகாமைத்துவ கருவியாக பயன்படுத்தப்பட வேண்டும். |